**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.392/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW–11</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ்பாபு | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கபாண்டியன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கோவை மாநகரம், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 07.05.2022ம் தேதி, 23.25 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.164/2022, சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

முதல்தகவல்அறிக்கையில் இராமசாமியை பார்த்து இத்தோடு செத்து ஒழி என்று கூறி, அவருடைய தலையில் வெட்டியும், தலையின் பின்புறம் வெட்டியும், கை, கால்களை வெட்டினான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரின் தன்மைப்படி, 307 இதச பிரிவு வராது என்றால் சரியல்ல. கொலை முயற்சி நடக்கவில்லை என்றாலும், நான் சட்டப்பிரிவை தவறாக போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று காயம்பட்ட இராமசாமியை மதியம் 01.00 மணிக்கு கைது செய்து, காவல் நிலையம் கொண்டு வந்து குற்ற எண்.162/2022 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். காயம்பட்ட இராமசாமியை எப்போது விடுவித்தோம் என்றால் ஆவணங்களைப் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

1ம் எதிரியின் மனைவியை இராமசாமி அழைத்து கொண்டு சென்று உடன் வைத்திருந்தார் என்றாலும், அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் பேச்சு-வார்த்தை நடத்தப்பட்டது என்றாலும், அதன் பின்பு 1ம் எதிரியின் மனைவியை காவல்நிலையத்தின் மூலம் 1ம் எதிரியின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றாலும் சரிதான். 07.05.2022 அன்று இரவு 08.37 மணியளவில் 1வது எதிரி அவருடைய தொலைபேசியில் இருந்து இராமசாமி 1வது எதிரியை தாக்க வந்ததாக எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல்நிலையத்தில் வைத்து புகார் எழுதினாரா? என்றால் இல்லை. புகார் எழுதி கொண்டு வந்தார்.

<u>**மறுவிசாரணை**</u> **–**

**இல்லை.**

**சாட்சி கோயம்புத்துார் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம்** G.R. Harish, Assistant Programmer, **முதன்மை மாவட்ட நீதிமன்றம்**, **கோயம்புத்துார் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு**, **இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:45:32 +0530